**<u>சுருக்கம்</u>**

திட்டங்கள் – ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை – பெரியார் நினைவு சமத்துவபுரம் – 2010 – 2011–ஆம் ஆண்டில் புதியதாக மேலும் 36 சமத்துவபுர குடியிருப்புகள் அமைத்தல் – விரிவான வழிகாட்டு நெறிமுறைகள் – ஆணைகள் வெளியிடப்படுகின்றன.

---

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (மா.அ.தி1) துறை

அரசு ஆணை (1D) எண். 247 நாள்: 19.05.2010

படிக்கப்பட்டவை:

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையரின் கடித எண்.35792/09/ஜி1, நாள் 4.5.2010.

* * *

**<u>ஆணை:</u>**

2010–2011–ஆம் ஆண்டிற்கான ஆளுநர் உரையிலும், 26.4.2010 அன்று நடைபெற்ற சட்டமன்றக் கூட்டத் தொடரில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் மானியக் கோரிக்கை விவாதத்திற்கு துணை முதலமைச்சர் அவர்கள் பதிலளித்து உரையாற்றும்போது இந்த ஆண்டு 36 சமத்துவபுரங்கள் ரூ.75 கோடி செலவில் அமைக்கப்படும் என அறிவிப்புச் செய்தார். அவ்வறிப்பினைத் தொடர்ந்து ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர் தனது கடிதத்தில், மாவட்டத்திற்கு ஒரு சமத்துவபுரம் வீதம் அனைத்து மாவட்டங்களிலும் 31 சமத்துவபுரங்கள் அமைக்கலாம் என்றும் எஞ்சியுள்ள 5 சமத்துவபுரங்களை அமைக்க எந்த மாவட்டத்தில் இடவசதி உள்ளதோ அதற்கேற்ப அம்மாவட்டங்களில் 2 சமத்துவபுரங்கள் அமைக்கலாம் என்றும் ஆக மொத்தம் நடப்பாண்டில் 36 சமத்துவபுரங்கள் அமைப்பதற்கு அனுமதியும், இத்திட்டத்தினை செயல்படுத்துவதற்கான வரைவு வழிகாட்டு நெறிமுறைகளையும் அரசுக்கு அனுப்பி ஆணை வேண்டியுள்ளார்.

2) ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையரின் செயற்குறிப்புகளை அரசு கவனமாகப் பரிசீலித்து, 2010–2011–ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் மாவட்டத்திற்கு ஒரு சமத்துவபுரம் வீதம் அனைத்து மாவட்டங்களிலும் 31 சமத்துவபுரங்களை அமைக்கவும், எஞ்சியுள்ள 5 சமத்துவபுரங்களை அமைக்க எந்த மாவட்டத்தில் இடவசதி உள்ளதோ அதற்கேற்ப அம்மாவட்டங்களில் 2 சமத்துவபுரங்களை அமைக்கவும், ஆக மொத்தம் 36 சமத்துவபுரங்களை அமைப்பதற்கு இதன்வழி ஆணையிடுகிறது. 2010–2011–ஆம் ஆண்டிற்கு சமத்துவபுரம் திட்டத்தினை நிறைவேற்றுவதற்கான வழிகாட்டு நெறிமுறைகள் இந்த ஆணையின் இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ளது.

3) இந்த ஆணை நிதித்துறையின் அ.சா. எண்.270/Secy(E)/10, நாள் 10.5.2010–ல் பெற்ற ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

க. அஷோக் வர்தன் ஷெட்டி,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர், சென்னை– 15.
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள்.
அனைத்து மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைகளின் திட்ட இயக்குநர்கள்.
ஆணையாளர், கருவூலக் கணக்கு, சென்னை – 15.
மாநில தலைமை கணக்காயர், சென்னை – 6/18/35.
தலைமைச் செயலக அனைத்து துறைகள், சென்னை–9,
ஆணையாளர், ஆதிதிராவிடர் நலத்துறை, சேப்பாக்கம், சென்னை–5.
இயக்குநர், பழங்குடியினர் நலத்துறை, சேப்பாக்கம், சென்னை–5.
இயக்குநர், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை, சென்னை – 5.
இயக்குநர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத்துறை,
சேப்பாக்கம், சென்னை–5.
முதன்மைச் செயலாளர் / ஆணையர்,
வருவாய் நிர்வாகம் மற்றும் பேரிடர் மேலாண்மை, சென்னை – 5.
நில நிர்வாக ஆணையர், சேப்பாக்கம், சென்னை – 5.
சிறப்பு ஆணையர் மற்றும் ஆணையர்,
இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை, சென்னை – 34.
மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு குடிநீர் வழங்கல் மற்றும் வடிகால் வாரியம், சென்னை – 5.
தலைவர், தமிழ்நாடு மின்சார வாரியம், சென்னை – 2.
தலைமைப் பொறியாளர் (கட்டிடம்), பொதுப்பணித் துறை, சென்னை – 5.
அனைத்து மாவட்ட கருவூல அலுவலர்கள்.

<u>நகல்:</u>
மாண்புமிகு முதலமைச்சரின் செயலாளர், சென்னை – 9.
மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களின் முதுநிலை நேர்முக உதவியாளர்,
சென்னை – 9.
நிதித்துறை, சென்னை–9

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.

## அரசாணை (1டி) எண்.247, ஊ.வ.(ம)ஊ.(மா.அ.தி1) துறை, நாள் 19.5.2010.

## இணைப்பு

## 2010–11 ம் ஆண்டு சமத்துவபுரம் அமைப்பதற்கான வழிகாட்டு நெறிமுறைகள்

### 1. இடத்தின் பரப்பளவு

- சமத்துவபுரத்திற்காக இடம் தேர்வு செய்யும் போது, சுமார் 8 முதல் 9 ஏக்கர் பரப்பளவுள்ள இடத்தை மாவட்டத்தில் கிராமப்புறத்தில் தேர்வு செய்யவேண்டும்.

### 2. இடம் தேர்வு செய்தல்

- தேர்ந்தெடுக்கப்பட்ட இடம் பேருந்து செல்லும் சாலைக்கு அருகிலும், மாவட்ட/கோட்ட/வட்ட/வட்டாரத் தலைமையிடத்திலிருந்து வெகுதூரத்தில் இல்லாமல் இருக்க வேண்டும். முந்தைய ஆண்டுகளில் இதுவரை சமத்துவபுரம் அமைக்கப்படாத வட்டாரத்தில் இடம் தேர்வு செய்வது நல்லது.

- சமத்துவபுரம் அமைப்பதற்கு குறிப்பாக அதிக மக்கள் தொகை உள்ள கிராமங்களைத் தேர்வு செய்யலாம்.

- சமத்துவபுரத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட இடத்திலிருந்து 1 முதல் 2 கி.மீ. தூரத்திற்குள் குடியிருப்புப் பகுதிகள் உள்ளதாக இருக்க வேண்டும். எக்காரணம் கொண்டும் பயனாளிகள் வசிப்பதற்கு தயக்கம் காட்டும் வகையில் ஒதுக்குப்புறமான இடமாக இருக்கக்கூடாது.

- தேர்ந்தெடுக்கப்பட்ட இடம் குடியிருப்புகள் கட்டுவதற்கு உகந்ததாக இருக்க வேண்டும். தாழ்வானப் பகுதியாகவோ அல்லது மழைக்காலங்களில் தண்ணீர் தேங்கும் பகுதியோகவோ இருக்கக் கூடாது. தேர்வு செய்யப்படும் இடம் மலைப் பகுதியாகவோ, பாறைகளாகவோ அல்லது உயர் அழுத்த மின்சாரக் கம்பிகள் செல்லும் பாதையிலோ இருக்கக்கூடாது. சமத்துவபுரத்திற்கான இடம் சமன்படுத்துவதற்கு அல்லது மண் நிரப்புவதற்கு எந்த செலவும் இல்லாதவாறு இருக்க வேண்டும்.

### 3. அனுமதிக்கப்பட்ட நிலத்தின் வகைப்பாடு

- மேலே பத்தி 2–ல் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்குட்பட்டு, தடையில்லாத காலியாக உள்ள புறம்போக்கு நிலங்கள் இருந்தால், அவற்றைக் கண்டறியலாம். அவ்வாறான நிலங்கள் இல்லாதபோது, தனி பேச்சுவார்த்தை மூலம் தனியார் நிலங்களை எடுக்கலாம். தடைசெய்யப்பட்ட குட்டை/ஊரணி/ கால்வாய்/ மேய்ச்சல் நிலங்கள் போன்ற புறம்போக்கு நிலங்களை மாற்றுவதற்கு கருத்துருக்கள் அனுப்பக்கூடாது.

- சமத்துவபுரத்திற்காக நிலம் எடுக்கும்போது புன்செய் நிலங்களுக்கு முன்னுரிமை அளிக்க வேண்டும். புன்செய் நிலங்கள் இல்லாதபோது மட்டும் நன்செய் நிலங்களை தனிப்பேச்சுவார்த்தை மூலம் வாங்கலாம்.

## 4. நிலம் வாங்குதல்

- தனியார் நிலங்களை பொருத்த அளவில் மாவட்ட வருவாய் அலுவலர் (உறுப்பினர் – செயலராக), துணை பதிவுத் துறை தலைவர் (பத்திரப்பதிவு) மற்றும் திட்ட இயக்குநர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை ஆகியோர் இடம்பெற்றுள்ள மாவட்ட ஆட்சியர் தலைமையிலான குழு தனிப்பேச்சுவார்த்தை மூலம் நிலத்தை வாங்கலாம். தற்போதுள்ள வழிமுறைகள் / வழிகாட்டு நெறிமுறைகளின்படி, நிலத்தின் வழிகாட்டி மதிப்புக்கு 150 சதவீதத்துக்கு மிகாமலோ அல்லது சந்தை மதிப்பு இதில் எது குறைவோ அந்த மதிப்பிற்கு நிலத்தின் விலையை இந்தக் குழு நிர்ணயிக்கலாம்.

- அசாதாரண சூழ்நிலையில், பேச்சு வார்த்தை நடத்தப்பட்ட பிறகும் நிலத்தின் மதிப்பு 150 சதவீதத்திற்கு மேல் இருந்து அந்தப் பகுதியின் அருகாமையில் நிலவும் அதிக சந்தை விலை காரணமாக நிலத்தின் விலையை 150 சதவீதத்திற்கும் கீழே குழுவால் குறைக்க முடியாத நிலையில், நிலம் கையகப்படுத்துவதை துரிதப் படுத்துவதற்காக ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையருக்கு நியாயப்படுத்தும் முழு ஆதாரங்களுடன் முன்மொழிவுகள் அனுப்ப வேண்டும். மாவட்ட ஆட்சித்தலைவரின் பரிந்துரைப்படியும், தகுதியின் அடிப்படையிலும் அரசு முதன்மைச் செயலாளர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, வருவாய்த்துறை செயலாளர், அரசு முதன்மைச் செயலாளர், நிதித்துறை, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர் (குழுக் கூட்டத்தைக் கூட்டுபவர்) ஆகியோர் உள்ள மாநில அளவிலான குழு நிலத்தின் மதிப்பை நிர்ணயிப்பதற்கு அதிகாரம் வழங்கப்படும்.

## 5. நிலத்தை உட்பிரிவு செய்தல்

- நிலம் மாற்றப்பட்ட அல்லது வாங்கப்பட்டப் பிறகு, பயனாளிகளுக்காக தனி வீட்டு மனைகளாக பிரிக்கப்படும். நகர் மற்றும் ஊரமைப்பு விதிகளுக்கேற்ப மனைப் பிரிவு குறைந்த கால அளவில் தயாரிக்கப்படும்.

- ஒவ்வொரு வீட்டு மனையும் 5 சென்ட் பரப்பளவு உள்ளதாக இருக்க வேண்டும். நகர் மற்றும் ஊரமைப்பு வழிமுறைகளுக்கேற்ப 7 மீட்டர் அகலம் உள்ள சாலைகள் அமைக்கப்பட்ட மனைப்பிரிவு இருக்க வேண்டும்.

- சமத்துவபுரங்கள் பன்னிரண்டு மாத காலத்திற்குள் கட்டி முடிக்கப்படவேண்டும். தாமதங்கள் தவிர்க்கப்பட வேண்டும். நகர் மற்றும் ஊரமைப்புத் துறையினால் மனைப்பிரிவுகளுக்கு ஒப்புதல் வழங்குவதில் வழக்கமாக தாமதம் உள்ளது. எனவே, சுனாமி வீடு கட்டும் திட்டத்திற்கு நகர் மற்றும் ஊரமைப்புத் துறையின் ஒப்புதல் பெறுவதிலிருந்து சிறப்பினமாக விலக்கு அளிக்கப்பட்டுள்ளது போன்று

சமத்துவபுரங்களின் வீட்டு மனைப் பிரிவுகளுக்கும் அரசிடமிருந்து இதுபோன்ற விதிவிலக்கு அரசாணை (நிலை) எண்.141. வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் (நவ4–1) துறை, நாள் 20.06.2008 மூலம் பெறப்பட்டுள்ளது.

## 6. மாதிரி வரைபடம் மற்றும் வீடுகள் கட்டுதல்

- சமத்துவபுரம் வீடுகள் அரசினால் கட்டப்படும். ஒவ்வொரு வீட்டிலும் தனியே குளியலறை மற்றும் உறிஞ்சு குழியுடன் கூடிய செப்டிக் டேங்க் உள்ள கழிப்பறை தனியே இருக்க வேண்டும். சமத்துவபுர வீடுகளின் மாதிரி வரைபடம் தனியே அனுப்பி வைக்கப்படுகிறது. மழைக்காலங்களில் மழை நீர் வீட்டினுள் புகாதவாறு தடுக்க ஒவ்வொரு வீட்டின் அடித்தளமும் தரைமட்டத்திலிருந்து குறைந்தளவு 1 மீட்டர் உயரமாவது இருத்தல் வேண்டும்.

## 7. பயனாளிகளைத் தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய கிராம ஊராட்சிகள்

சமத்துவபுரத்திற்கான பயனாளிகள் கீழ்க்கண்ட வழிமுறையின்படி தேர்ந்தெடுக்கப்படுவார்கள்:

- முடிந்தவரை, சமத்துவபுரம் அமைக்கப்பட உள்ள கிராமத்திலிருந்து பயனாளிகளைத் தேர்ந்தெடுக்க வேண்டும்.

- சம்மந்தப்பட்ட கிராம ஊராட்சியில் தேவையான எண்ணிக்கையில் தகுதி உள்ள பயனாளிகள் இல்லாத போது அருகாமையில் உள்ள அதிக மக்கள் தொகை கொண்ட ஊராட்சிகள் (சமத்துவபுர கிராம ஊராட்சியின் எல்லையைத் தொடும் அருகாமையில் உள்ள கிராம ஊராட்சிகள்) சமத்துவபுரப் பயனாளிகளைத் தேர்ந்தெடுப்பதற்குப் பரிசீலிக்கப்படும். அதிக மக்கள் தொகை உள்ள அருகாமையில் உள்ள கிராம ஊராட்சியிலும் தேவையான எண்ணிக்கையில் பயனாளிகள் இல்லை எனில், அதற்கு அடுத்த அதிக மக்கள் தொகை உள்ள அருகாமையில் உள்ள வேறு கிராம ஊராட்சியிலிருந்து தேர்ந்தெடுக்கலாம். 100 பயனாளிகள் தகுதியின் அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்படும் வரை இந்த முறையைத் தொடரவேண்டும்.

## 8. சமத்துவபுரம் பயனாளிகளுக்கான சாதிவாரியாக ஒதுக்கீடு

- பயனாளிகளுக்கு கீழ்க்கண்ட விகிதங்களின்படி வீடுகள் ஒதுக்கீடு செய்யப்படும்.

| | | |
|---|---|---|
| ஆதி திராவிடர்கள் | – | 40 |
| பிற்படுத்தப்பட்டவர்கள் | – | 25 |
| மிகவும் பிற்படுத்தப்பட்டவர்கள் | – | 25 |
| மற்றவர்கள் | – | 10 |

- அனைத்து வகுப்புக் குடும்பங்களும் அக்கம்பக்கம் கலந்த முறையில் உள்ளவாறு பட்டாவை பயனாளிகளுக்கு முதலிலேயே வழங்க வேண்டும். ஒவ்வொரு 20 வீடுகளுக்கும் கீழ்க்கண்ட பொதுவானமுறையை வீடுகளை ஒதுக்குவதற்குக் கடைப்பிடிக்கப்படவேண்டும்.

| கூகை | வீட்டு எண் |
|---|---|
| ஆதிதிராவிடர்கள் | 2,4,7,10,12,14,17,20 |
| பிற்படுத்தப்பட்டவர்கள் | 1,5,9,11,15 |
| மிகவும் பிற்படுத்தப்பட்டவர்கள் | 3,6,13,16,19 |
| மற்றவர்கள் | 8,18 |

- மாவட்டத்தின் மக்கள் தொகை அமைப்பில் சமத்துவபுரம் கிராமம் மற்றும் அதன் அருகாமையில், ஆதி திராவிடர் / பிற்படுத்தப்பட்டோர் / மிகவும் பிற்படுத்தப்பட்டோர் / இதர வகுப்பினர்களில் தேவையான எண்ணிக்கையில் பயனாளிகள் இல்லாதபோது, மாவட்ட ஆட்சித் தலைவரின் பரிந்துரையின் அடிப்படையில் சமத்துவபுர நோக்கத்திற்குட்பட்டு, மேற்சொன்ன ஒதுக்கீடு விகிதத்தை உரிய முறையில் மாற்றியமைக்க ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையருக்கு அதிகாரம் அளிக்கப்படுகிறது.

## 9. தேர்வுக்குழு

- சமத்துவபுரத்திற்கான பயனாளிகளைத் தேர்ந்தெடுக்கும் குழு கீழ்க்குறிப்பிட்டுள்ள நபர்களை உள்ளடக்கியதாக இருக்கும்.

  (1) திட்ட இயக்குநர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை – குழுத் தலைவர்

  (2) வட்டார வளர்ச்சி அலுவலர் (வட்டார ஊராட்சி)

  (3) சம்பந்தப்பட்ட தாலுகாவின் வட்டாட்சியர்

  (4) சமத்துவபுரம் அமைந்துள்ள கிராம ஊராட்சித் தலைவர்

  (5) சம்மந்தப்பட்ட கிராம நிர்வாக அலுவலர்கள்

  (6) சமத்துவபுர கிராமத்திலிருந்து ஊராட்சி அளவிலான கூட்டமைப்பின் ஒரு உறுப்பினர்.

- சமத்துவபுரத்திற்கு அருகாமையில் உள்ள கிராமம் அல்லது கிராமங்களிலிருந்து பயனாளிகள் தேர்ந்தெடுக்கப்படும் போது வரிசை எண் 4, 5 மற்றும் 6–ல் உள்ள தேர்வுக் குழு உறுப்பினர்கள் சம்மந்தப்பட்ட கிராமத்திலிருந்து தேர்வுக் குழு உறுப்பினர்களாக இடம் பெறுவர்.

- சமத்துவபுரத்தில் நிரந்தரமாக தங்குவதற்கு விருப்பம் உள்ள தகுதி உள்ளவர்களிடமிருந்து மேற்சொன்ன குழு விண்ணப்பங்களைப் பெறும். சமத்துவபுரத்திற்கு பயனாளிகளைத் தேர்ந்தெடுக்கும் போது, (1) மண்சுவர் உள்ள கூரை வீடு (2) செங்கல் சுவர் உள்ள கூரை வீடு (3) மண்சுவர் உள்ள ஒடு வேயப்பட்ட வீடு (4) செங்கல் சுவர் உள்ள ஒடு வேயப்பட்ட வீடு ஆகியவற்றில் குடியிருப்பவர்கள் ஏழைகளாக இருக்கலாம் என்பதால் அவர்களுக்கு மேற்கண்ட வரிசைப்படி முன்னுரிமை அளிக்கப்படும். பயனாளிகள் பட்டியல் இறுதியாக மாவட்ட ஆட்சித் தலைவரால் ஒப்புதல் அளிக்கப்பட வேண்டும்.

- சிமெண்ட் கான்கிரீட் கூரை உள்ள வீடுகளில் வசிப்பவர்களுக்கு சமத்துவபுர வீடுகள் பெறத் தகுதி இல்லை.

- மேலும் இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டம் அல்லது இதர வீட்டு வசதி திட்டங்களான மீனவர் இலவச வீட்டுத் திட்டம், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் மலைவாழ் மக்களுக்கான வீடுகள் கட்டும் திட்டம் ஆகிய திட்டங்களில் பயன் பெற்றவர்கள் சமத்துவபுரம் வீடு பெற தகுதியில்லை.

- அனைத்து வகுப்பினர்களிலும் உள்ள ஊனமுற்றோருக்கு 3 சதவீதம் வீடுகள் ஒதுக்கீடு செய்யப்படும். இதிலிருந்து 70 சதவீதம் மற்றும் அதற்கு மேல் ஊனமுற்றோர் / மனவளர்ச்சி குன்றியவர் ஆகியோருக்கு தகுந்த அதிகாரம் பெற்றவரின் சான்றிதழின் பேரில் வீடு ஒதுக்கப்படும். தேவைப்படின், ஊனமுற்ற நபர்களின் பெற்றோருக்கு வீடுகள் ஒதுக்கப்படலாம்.

## <u>10. பட்டா வழங்குதல்</u>

- கணவர் மற்றும் மனைவி பெயர்களில் கூட்டாக பட்டா அளிக்கப்படும்; கணவரோ அல்லது மனைவியோ உயிரோடு இல்லாதபோது, உயிருடன் இருப்பவருக்கு பட்டா அளிக்கப்படும்.

- ஒரு வீடு கட்டுவதற்கு ஆரம்பிக்கும் முன்பாகவே பயனாளிகள் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். வீட்டு மனைகள் ஒதுக்கீடு செய்து பயனாளிகளுக்கு வீடுகளை முன்பாகவே ஒதுக்குவதன் மூலம் பயனாளிக்கு தன்னுடைய வீடு கட்டப்படும் இடத்தை அறிந்து கொள்ள ஏதுவாகும். கட்டிடம் கட்டும் ஆரம்ப நிலையிலேயே பயனாளியை ஈடுபடுத்த இயலும். 100 பயனாளிகள் இறுதி செய்யப்பட்ட உடனே, மேலே பத்தி 8–ல் குறிப்பிடப்பட்டுள்ள சுழற்சி முறையை கடைபிடித்து குலுக்கல் முறையில் வீட்டு எண் வழங்கப்படும்.

## 11. பயனாளிகள் அளிக்க வேண்டிய உறுதிமொழி

- பயனாளிகளுக்கு வீடு ஒதுக்கப்படுவதற்கு முன்பாக கீழ்க்கண்ட இனங்கள் மீது எழுத்து மூலமான உறுதி மொழி வாங்கப்பட வேண்டும்.

    (1) வீடு ஒதுக்கப்பட்ட தேதியிலிருந்து 30 ஆண்டுகள் வரை வீட்டினை விற்கவோ அல்லது அடமானம் வைக்கவோ அல்லது சட்டப் பிரச்னை ஏற்படுத்தவோ கூடாது. வீட்டை வசிப்பதற்கு தவிர வேறு நோக்கத்திற்காக உபயோகிக்கக்கூடாது.

    (2) வீட்டில் நிரந்தரமாக வசிக்க வேண்டும். தொடர்ந்து இரண்டு வாரங்களுக்கு மேற்பட்டு வீட்டில் வசிக்காமலும் அல்லது வசிப்பிடத்தை மாற்றினாலும் அல்லது வீட்டை வாடகைக்கு விட்டாலும், ஒதுக்கீடு செய்யப்பட்ட வீட்டை ரத்து செய்து தகுதியுள்ளவருக்கு மறு ஒதுக்கீடு செய்யப்படும்.

    (3) பயனாளிகள் சமத்துவபுரத்தில் உள்ள வீடுகளுக்கு சேதத்தையோ அல்லது பொது இடங்களை ஆக்கிரமிப்பு செய்யவோ கூடாது.

    (4) பொதுவான அடிப்படை வசதிகளான குடிநீர், சாலைகள் மற்றும் பொது விநியோகக் கடையை சாதி, மத பேதமின்றி உபயோகிக்க வேண்டும்.

## 12. அடிப்படை வசதிகள் மற்றும் இதர பணிகள்

- சமத்துவபுரத்தில் 100 வீடுகள் கட்டுவதோடு மட்டுமல்லாமல், கீழ்க்கண்ட அடிப்படை வசதிகள் மற்றும் இதர பணிகள் மேற்கொள்ள வேண்டும்.

    (1) தெரு விளக்குகள்

    (2) மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன் கூடிய குடிநீர் வசதி

    (3) தார் / சிமெண்ட் சாலைகள்

    (4) பொது விநியோகக் கடை (தேவையின் அடிப்படையில்)

    (5) நுழைவாயிலில் ‘பெரியார் நினைவு சமத்துவபுரம்’ என எழுதப்பட்ட அலங்கார வளைவு

    (6) தந்தை பெரியாரின் வெண்கல சிலை

**13. திட்ட செயல்பாடு**

- இந்த திட்டத்தை வட்டார வளர்ச்சி அலுவலர் (வட்டார ஊராட்சி) செயல்படுத்துவார். திட்ட இயக்குநர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை கீழ்க்கண்டவாறு பணிகளைத் தொகுத்து ஒப்பந்தப் புள்ளியைக் கோருவார்.

| | | | |
|---|---|---|---|
| 1) | தொகுப்பு I | – | 100 வீடுகள் மற்றும் பொது விநியோகக் கடை. |
| 2) | தொகுப்பு II | - | சமத்துவபுரத்திற்கான சாலைகள் மற்றும் அலங்கார வளைவு. |
| 3) | தொகுப்பு III | – | குடிநீர் வசதிப் பணிகள். |

தெரு விளக்குகள் அமைக்கும் பணி தமிழ்நாடு மின்சார வாரியத்திடம் ஒப்படைக்கப்படும். திருப்திகரமாக பணிகள் முடிவுற்ற பிறகு சம்மந்தப்பட்ட வட்டார வளர்ச்சி அலுவலர் (வட்டார ஊராட்சி) பணிகளுக்கான பட்டியல் தொகையை வழங்குவார்.

திட்ட செயலாக்கத்தின்போது அவ்வப்போது ஏற்படும் அவசியத்திற்கேற்ப, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையரைக் கலந்தாலோசித்து மேற்கண்ட வழிகாட்டு நெறிமுறைகளில் எவற்றையேனும் மாற்றி அமைப்பதற்கு அரசு முதன்மைச் செயலர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை அவர்களுக்கு அதிகாரம் அளிக்கப்படுகிறது.

**க. அஷோக் வர்தன் ஷெட்டி**
**அரசு முதன்மைச் செயலாளர்.**

**//உண்மை நகல்//**

**பிரிவு அலுவலர்.**